## எழுத்தாளர் உதயசங்கருக்கு 'பால சாகித்ய புரஸ்கார்' விருது - ஆளுநர், முதல்வர் வாழ்த்து




**சென்னை:** இந்த ஆண்டின் குழந்தை இலக்கியத்துக்கான 'பால சாகித்ய புரஸ்கார்' விருது டெல்லியில் நேற்று அறிவிக்கப்பட்டது. இதில் தமிழ் மொழிக்கான விருதுக்கு எழுத்தாளர் உதயசங்கர் தேர்வு செய்யப்பட்டுள்ளார். இவர் எழுதிய 'ஆதனின் பொம்மை' என்ற நாவலுக்கு இந்த விருது கிடைத்துள்ளது.

கோவில்பட்டியில் பிறந்தவரான உதயசங்கர், தமிழகத்தின் நிகழ்கால குழந்தை இலக்கிய எழுத்தாளர்களில் மிகவும் முதன்மையானவராகக் கருதப்படுகிறார். சிறுகதை, கவிதை, கட்டுரை, மொழிபெயர்ப்பு என 40 ஆண்டுகளுக்கும் மேலாக எழுதி வருகிறார்.

இந்திய மொழிகள் மற்றும் ஆங்கிலத்தில் சிறப்பாக எழுதி வரும் 35 வயதுக்குட்பட்ட இளம் இந்திய எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் வகையில் சாகித்ய அகாடமி சார்பில் ஆண்டுதோறும் 'யுவ புரஸ்கார்' விருது வழங்கப்படுகிறது. 2023-ம் ஆண்டின் தமிழ் மொழிக்கான விருதுக்கு எழுத்தாளர் ராம் தங்கம் எழுதிய 'திருக்கார்த்தியல்' என்ற சிறுகதைத் தொகுப்பு தேர்வு செய்யப்பட்டுள்ளது. நாகர்கோவிலைச் சேர்ந்தவரான ராம் தங்கம், முன்னணி

நிறுவனங்களில் பத்திரிகையாளராகப் பணியாற்றி தற்போது முழுநேர எழுத்தாளராக எழுதி வருகிறார்.

விருதுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ள எழுத்தாளர்களுக்கு ரூ.50 ஆயிரத்துக்கான காசோலை, செப்புப் பட்டயம் ஆகியவை கொண்ட விருது புதுடெல்லியில் பின்னர் நடைபெறும் சிறப்பு நிகழ்வில் வழங்கப்படும்.

## சென்னையில் பெண்களின் பாதுகாப்புக்கு செயற்கை நுண்ணறிவு பயன்படுத்தப்படுவது எப்படி? - காவல் துறை விளக்கம்



**சென்னை:** சென்னையில் பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்ய செயற்கை நுண்ணறிவு பயன்படுத்தப்படுவதாக சென்னை காவல் துறை தெரிவித்துள்ளது. நிர்பயா நிதியில் பாதுகாப்பான நகரத் திட்டங்களின் (Nirbhaya Safe City Projects) ஒரு பகுதியாக, சென்னை பாதுகாப்பான நகர திட்டத்தின் (Chennai Safe City Project - CSCP) கீழ் அமைக்கப்பட்டு ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையத்தை (Integrated Command & Control Centre - ICCC) காவல் ஆணையாளர் சங்கர் ஜிவால் இன்று (23.06.2023) துவக்கி வைத்தார்.

இது தொடர்பாக சென்னை காவல் துறை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: சென்னை பாதுகாப்பான நகர திட்டத்தின் கீழ் சென்னை பெருநகர காவல் எல்லை முழுவதும் அடையாளம் காணப்பட்ட 1,750

முக்கிய இடங்களில் மொத்தம் 5,250 சிசிடிவி கேமராக்கள் நிறுவும் பணி மேற்கொள்ளப்பட்டு, முதற்கட்டமாக, 1,336 இடங்களில் 4,008 சிசிடிவி கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன.

இந்த 1,336 கேமராக்களின் காணொளி பதிவுகள் ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையத்தில் (Integrated Command & Control Centre) கண்காணிக்கப்படும். மேலும், சிசிடிவி கேமரா காணொளி பதிவுகள் சென்னை பெருநகரில் குற்றச் சம்பவங்களைக் குறைக்கும் வகையில் கட்டுப்பாடு மையத்தில் 24 மணி நேரமும் சுழற்சி முறையில் கண்காணிக்கப்படும்.

நவீன தொழில்நுட்பம் மற்றும் செயற்கை நுண்ணறிவு (AI-Artificial Intelligence) சார்ந்த மென்பொருள் பயன்படுத்தப்பட்டுள்ளதால், குற்ற நிகழ்வுகளை பகுப்பாய்வு செய்யும் அம்சத்துடன் உரிய எச்சரிக்கை செய்திகளை உடனுக்குடன் வழங்குவதால், குற்ற நிகழ்வுகள் மீது உடனுக்குடன் கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டு, உடனடி நடவடிக்கையை மேற்கொள்ளப்படும்.


குற்றச் சம்பவங்களான செயின், செல்போன் மற்றும் கைப்பை பறிப்பு, பெண்களை கேலி செய்தல், ஆண்களிடையே அல்லது வன்முறை சூழ்நிலையில் சிக்கியுள்ள பெண்கள், கடத்தல், பொருட்களை சூறையாடுதல், வாகனத் திருட்டு கண்டறிதல் மற்றும் கண்காணிப்பு கேமராக்கள் சேதப்படுத்துதல் உள்ளிட்ட காணொளி நிகழ்வுகளை பகுப்பாய்வுகள் (Video Analytics) செய்யும் அம்சம் உள்ளது.

செயற்கை நுண்ணறிவு (AI-Artificial Inteligence) அடிப்படையிலான மென்பொருள் பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் என்பதையும் கவனத்தில் கொள்ளலாம். ஏனெனில் கேமரா காணொளி பதிவாக்கும் அவசர சைகைகளை (SoS Gesuters) கூட AI மென்பொருளால் நிலைமையை பகுப்பாய்வு செய்து, ஒருங்கிணைந்த கட்டளை மற்றும்

கட்டுப்பாட்டு மையம் (ICCC) மூலம் தகுந்த நடவடிக்கை எடுக்க எச்சரிக்கும்.

காணொளி பதிவுகள் தரவு மையத்தில் சேமிக்கப்பட்டு, தரவு மீட்பு மையத்திலும் பாதுகாக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. மேற்படி கேமராக்களின் நேரலை காட்சிகள் ஒருங்கிணைந்த கட்டுப்பாட்டு மையத்தில் (ICCC) கண்காணிக்கப்படுவது போல, 6 காவல் இணை ஆணையாளர்கள் மற்றும் 12 காவல் துணை ஆணையாளர் அலுவலகங்களிலும் கண்காணிக்கும் வசதி செய்யப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மஞ்சப்பை வலைதளம், செயலியில் பல வசதிகள்: மாசுக் கட்டுப்பாடு வாரியம் விளக்கம்




**சென்னை:** மஞ்சப்பை செயலியில் உள்ள வசதிகள் தொடர்பாக மாசு கட்டுப்பாடு வாரியம் விளக்கம் அளித்துள்ளது.

இது தொடர்பாக மாசுக் கட்டுப்பாடு வாரியம் வெளியிட்டுள்ள அறிக்கையில், "தமிழக அரசின் சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்துடன் (TNPCB) இணைந்து, ஒருமுறை மட்டும் பயன்படுத்தும் பிளாஸ்டிக் பொருட்களுக்கு விதித்த தடையினை கடந்த

2019-இல் இருந்து செயல்படுத்தி வருகின்றது. அதன் அடிப்படையில் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அதிகாரிகளை கொண்டு மாவட்ட வாரியாக ஒருமுறை மட்டும் பயன்படுத்தும் பிளாஸ்டிக் பொருட்களுக்கு எதிரான தொடர் சோதனைகள் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்தி வருகின்றது.

அதன் தொடர்ச்சியாக 06.06.2023 அன்று தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய அரங்கத்தில் நடைபெற்ற உலக சுகாதார தினவிழாவில் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் மெய்யநாதன் தொடங்கி வைத்த “மீண்டும் மஞ்சப்பை இணையதளம்” மற்றும் “மீண்டும் மஞ்சப்பை செயலியானது அனைவரும் பயன்படுத்தும் வண்ணம் தமிழ் மற்றும் ஆங்கில உருவில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்த மஞ்சப்பை இணையதளம், பொதுமக்களுக்கு மத்திய மற்றும் மாநில அரசால் தடைசெய்யப்பட்ட ஒருமுறை பயன்படுத்தும் பிளாஸ்டிக் பொருட்களின் விவரங்கள், தடைசெய்யப்பட்ட ஒருமுறை பயன்படுத்தும் பிளாஸ்டிக் பொருட்களின் தீமைகள் குறித்து நடத்தப்பட்ட விழிப்புணர்வு பிரச்சார விவரங்களை அறிந்த கொள்ள உதவுகிறது. தமிழகம் முழுவதும் தடைசெய்யப்பட்ட ஒருமுறை பயன்படுத்தும் பிளாஸ்டிக் பயன்பாட்டை தடுக்க அதிகாரிகள் மேற்கொண்ட மாவட்ட வாரியான அமலாக்க விவரங்கள், பல்வேறு சுற்றுச்சூழலுக்கு உகந்த பொருட்களின் உற்பத்தியாளர்கள் மற்றும் மாவட்ட வாரியாக வகைப்படுத்தப்பட்ட பிளாஸ்டிக் கழிவுகளை மறுசுழற்சி செய்பவர்களின் விவரங்கள் இந்த இணையதளத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மஞ்சப்பை விற்பனை இயந்திரம் மற்றும் பிளாஸ்டிக் பாட்டில் நசுக்கும் இயந்திரங்கள் அமைந்துள்ள இடங்கள் மாவட்ட வாரியாக இணையதளத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த இணையதளம் சமீபத்திய சர்வதேச, தேசிய மற்றும் மாநில செய்திகள் மற்றும் வெளியீடுகளை வழங்கும். இதேபோல், மஞ்சப்பை செயலி, தடைசெய்யப்பட்ட ஒருமுறை பயன்படுத்தும் பிளாஸ்டிக்

பொருட்கள் மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த பொருட்களுக்கான விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கத்துடன் வடிவமைக்கப்பட்டுள்ளது.

மஞ்சப்பை செயலி மூலம், கூகுள் வரைபடத்தின் மூலம் மஞ்சப்பை விற்பனை இயந்திரம் மற்றும் பிளாஸ்டிக் பாட்டில் நசுக்கும் இயந்திரம் இருக்கும் இடத்தை அறிந்து கொள்ள முடியும். சுற்றுச்சூழலுக்கு உகந்த பொருட்களை உற்பத்தி செய்பவர்களின் விவரங்களை அறிந்துகொள்ள மற்றும் பதிவு செய்ய செய்யலாம். தடை செய்யப்பட்ட ஒருமுறை பயன்படுத்தும் பிளாஸ்டிக் பொருட்களை பயன்படுத்துவோர்க்கு எதிராக புகார்களை பதிவு செய்யலாம். மேலும் தெரிந்துகொள்ள www.tnpcbmeendummanjappai.com மற்றும் "மீண்டும் மஞ்சப்பை" செயலியிணை Play Store-லிருந்து பதிவிறக்கவும் செய்து பயன்படுத்தவும்" என்று அதில் கூறியுள்ளார்..

## இந்தியாவின் முதல் செமி கண்டக்டர் சிப் 2024 டிசம்பரில் வெளிவரும் - மத்திய அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் தகவல்



**புதுடெல்லி:** இந்தியாவில் தயாரான முதல் செமி கண்டக்டர் சிப் 2024 டிசம்பரில் வெளியாகும் என்று மத்திய தகவல்தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.

அமெரிக்கா சென்றுள்ள பிரதமர் மோடி, அதிபர் ஜோ பைடனுடன் இணைந்து கூட்டறிக்கையை நேற்று முன்தினம் வெளியிட்டார்.

இதைத் தொடர்ந்து செய்தியாளர்களிடம் மத்திய அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் கூறியதாவது: உலகம் முழுவதும் செமி கண்டக்டர்களின் தேவை அதிகரித்து வருகிறது.

எனவே இந்தியாவிலும் அதுபோன்ற தொழிற்சாலையை உருவாக்க பிரதமர் மோடி தலைமையிலான அரசு முடிவு செய்தது. குஜராத் மாநிலத்தில் மைக்ரான் நிறுவனத்தின் செமி கண்டக்டர் தொழிற்சாலை அமைப்பதற்கான பணிகள் நிறைவடைந்துள்ளன.

4 முதல் 5 செமி கண்டக்டர் தொழிற்சாலைகள் ஓராண்டுக்குள் இந்தியாவில் அமைக்கப்படும். 2024-ம் ஆண்டு டிசம்பருக்குள் இந்தியாவில் தயாராகும் முதலாவது செமி கண்டக்டர் சிப் வெளியாகும். இது மைக்ரான் நிறுவனத்தின் முதலாவது செமி கண்டக்டர் சிப்பாக இருக்கும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

அமெரிக்காவைச் சேர்ந்த மைக்ரான் டெக்னாலஜி செமி கண்டக்டர் சிப் நிறுவனம், செமி கண்டக்டர் தொழிற்சாலையை அமைப்பதற்கான ஒப்பந்தத்தை இந்தியாவுடன் செய்து
கொண்டது. கடந்த ஆண்டு ஜூன் மாதம் கையெழுத்தான இந்த ஒப்பந்தத்தின்படி குஜராத்தில் 8.25 கோடி அமெரிக்க டாலர்கள் முதலீட்டில் தொழிற்சாலையை மைக்ரான்
நிறுவனம் அமைத்து வருகிறது. இந்தியாவில் அமைக்கப்படும் முதலாவது செமி கண்டக்டர் தொழிற்சாலையாகும் இது.

மத்திய அரசு, குஜராத் மாநில அரசுகளின் ஆதரவுடன் மொத்தம் 275 கோடி அமெரிக்க டாலர்கள் முதலீட்டில் இது அமைகிறது. முதலீட்டுத் தொகையில் மத்திய அரசு 50 சதவீதத்தையும், மாநில அரசு 20 சதவீதத்தையும், மீதமுள்ள தொகையை மைக்ரான் நிறுவனமும் வழங்குகிறது. 2024-ம் ஆண்டு இறுதியில் தொழிற்சாலை செயல்பட தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## வாக்னர் ஆயுதக் குழு எச்சரிக்கை எதிரொலி: ரஷ்ய தலைநகர் மாஸ்கோவில் பலத்த பாதுகாப்பு



**மாஸ்கோ:** வாக்னர் ஆயுதக் குழு எச்சரிக்கையைத் தொடர்ந்து ரஷ்யத் தலைநகர் மாஸ்கோ உள்பட நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

ரஷ்யாவின் ராணுவத் தலைமையை அழிப்போம். எங்கள் ஆட்டத்தைத் தொடங்கிவிட்டோம். இனி எங்கள் பாணியில் வழியில் எதிர்கொள்ளும் எல்லாவற்றையும் துவம்சம் செய்வோம். ரஷ்யர்கள் இணைந்து கொள்ளுங்கள்" என்று வாக்னர் ஆயுதக் குழு எச்சரிக்கை விடுத்துள்ளது. இது ரஷ்ய அதிபர் விளாடிமிர் புதினுக்கு புதிய நெருக்கடியாக உருவெடுத்துள்ளது.

இந்நிலையில், வாக்னர் ஆயுதக் குழு எச்சரிக்கையைத் தொடர்ந்து ரஷ்யத் தலைநகர் மாஸ்கோ உள்பட நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மாஸ்கோ மேயர் செர்கெய் ஸோபியானின் தனது சமூக வலைதளப் பக்கத்தில், "வாக்னர் குழு எச்சரிக்கையைத் தொடர்ந்து நாடு முழுவதும் தீவிரவாத தடுப்பு நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன. ரஸ்டோவ் மற்றும் லிபெட்ஸ்க்

பகுதிகளில் ராணுவம் குவிக்கப்பட்டுள்ளது" என்று குறிப்பிட்டுள்ளார். அவருடைய இந்தப் பதிவு உலக நாடுகளின் கவனத்தை ஈர்த்துள்ளது.

**உற்று நோக்கும் அமெரிக்கா:** இந்நிலையில் ரஷ்ய நிலவரம் குறித்து உற்று நோக்கி வருவதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது. அந்நாட்டின் என்பிசி சேனலுக்கு தேசிய பாதுகாப்பு கவுன்சிலின் செய்தித் தொடர்பாளர்களுள் ஒருவரான ஆடம் ஹாட்ஜ், "நாங்கள் நிலைமையை ஆராய்ந்து வருகிறோம். எங்களின் நட்பு நாடுகளுடனும் இந்த நிலைமை பற்றி ஆலோசித்து வருகிறோம்" என்று தெரிவித்துள்ளார்.

**வாக்னர் ஆயுதக் குழுவின் பின்னணி என்ன?** வாக்னர் ஆயுதக் குழு என்பது ரஷ்யாவில் இயங்கிவரும் தனியார் ராணுவ ஒப்பந்த அமைப்பாகும். இது ஒருவித கூலிப்படை என்றும் கூறலாம். ஏனெனில் ரஷ்யா மட்டுமல்லாது லிபியா, மாலி, சிரியா எனப் பல பகுதிகளிலும் உள்நாட்டுப் போரில் ஒப்பந்ததாரர்களாக இந்தக் குழுவினர் இயங்குகின்றனர்.

உலகம் முழுவதும் இந்தக் குழு சட்டத்துக்கு அப்பாற்பட்டே செயல்படுகிறது. ரஷ்யாவிலும் தனியார் ராணுவ ஒப்பந்தக்காரர்கள் சட்டபூர்வமாக தடை செய்யப்பட்டுள்ளனர். ஆனால் மறைமுகமாக அதிபர் புதினின் ஆதரவோடு, ராணுவத்தின் சம்மதத்தோடு தேவைப்படும்போது இந்தக் குழு இயக்கிக் கொள்ளப்படுகிறது என்றும் கூறப்படுகிறது. இந்நிலையில் தான் வாக்னர் ஆயுதக் குழு ஓர் எச்சரிக்கை விடுக்க புதினால் வளர்க்கப்பட்ட குழுவால் தற்போது அவருக்கே நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

**எச்சரிக்கை ஏன்?** வாக்னர் குழுவின் தலைவர் யெவ்ஜெனி ப்ரிகோஸின் சனிக்கிழமை வெளியிட்ட ஆடியோவில் ரஷ்ய ராணுவத் தலைமைக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார். அதில், "நாங்கள் 25,000 பேர் இருக்கிறோம். நாட்டின் ராணுவத் தலைமையை வீழ்த்துவோம். நாங்கள் முன்னேறிச் சென்று கொண்டிருக்கிறோம். வழியில் எந்தத் தடை வந்தாலும் எங்கள் பாணியில் துவம்சம் செய்வோம். ஏற்கெனவே ரஷ்ய ராணுவத்தை தாக்கியுள்ளோம். எங்கள்

படைகள் ரஷ்யாவின் தெற்கே உள்ள ரோஸ்டோவ் பகுதிக்குள் நுழைந்துவிட்டது" என்று கூறியுள்ளார்.

வாக்னர் ஆயுதக் குழு உக்ரைனின் கிழக்குப் பகுதியில் ராணுவத் தாக்குதலின்போது பயன்படுத்திக் கொள்ளப்பட்டது. ஆனால் அண்மைக்காலமாக இந்தக் குழுவுக்கு ரஷ்ய ராணுவம் பல்வேறு நெருக்கடிகள் கொடுத்துவருவதால் இந்த எதிர்வினை என்று தெரிகிறது. தனது ஆடியோ செய்தியில் வாக்னர் குழுத் தலைவர் ப்ரிகோஸின் இதனையும் சேர்த்தே குறிப்பிட்டுள்ளார்.

## ‘ஜனநாயகம் எங்கள் உணர்வில்' - பிரதமர் மோடி பேட்டி



இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியும், அமெரிக்க அதிபர் ஜோ பைடனும் மதுவை அறவே தவிர்த்து வருகின்றனர். இதன்காரணமாக அமெரிக்க அதிபர் மாளிகையில் அளிக்கப்பட்ட விருந்தில் இரு தலைவர்களும் சர்பத் அருந்தினர்.படம்: பிடிஐ

அமெரிக்க தலைநகர் வாஷிங்டன் நகரில் உள்ள வெள்ளை மாளிகையில் அதிபர் ஜோ பைடனும், பிரதமர் மோடியும் கூட்டாக பேட்டியளித்தனர். அப்போது பிரதமர் மோடியிடம் இந்தியாவில் சிறுபான்மையினருக்கு எதிரான பாகுபாடு குறித்து நிருபர் ஒருவர் கேள்வி எழுப்பினார்.

‘‘உலகின் மிகப் பெரிய ஜனநாயகம் என்ற பெருமையை இந்தியா நீண்ட காலமாக கொண்டுள்ளது. ஆனால், உங்கள் அரசு சிறுபான்மையினருக்கு எதிராக பாகுபாடு காட்டுவதாகவும், அதைப் பற்றி விமர்சிப்பவர்களை அடக்குவதாகவும் மனித உரிமை அமைப்புகள் கூறுகின்றன. அவர்களின் உரிமைகள் மேம்படவும், சுதந்திரமான பேச்சுரிமைக்கும் நீங்கள் என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறீர்கள்?’’ என அந்த நிருபர் கேள்வி எழுப்பினார்.

இதற்கு பிரதமர் மோடி அளித்த பதில்: அதிபர் பைடன் கூறியது போல், இந்தியா மற்றும் அமெரிக்காவின் டிஎன்ஏ.,வில் ஜனநாயகம் உள்ளது. ஜனநாயகம் எங்கள் ரத்தத்திலும், உணர்விலும் உள்ளது. எங்கள் அரசியல் சாசனத்தில் எங்கள் முன்னோர்கள் ஜனநாயகத்தை ஊக்குவித்துள்ளனர். அரசியல் சாசனத்தில் எழுதப்பட்டுள்ள ஜனநாயக விதிமுறைகளை எனது அரசு பின்பற்றுகிறது. ஜனநாயகத்தால்தான் பிறருக்கு எதையும் செய்ய முடியும் என்பதை எனது அரசு ஏற்கெனவே அறிவித்துள்ளது.

இதில் ஜாதி, இன, மத ரீதியாக எந்த பாகுபாட்டையும் நாங்கள் பார்ப்பதில்லை. மனித நேயம், மனித உரிமைகளுக்கு மதிப்பில்லை என்றால், எந்த நாட்டையும், ஜனநாயக நாடு என அழைக்க முடியாது. இந்தியாவை ஜனநாயக நாடு என கூறும்போது, பாகுபாடு என்ற கேள்விக்கே இடமில்லை. அனைவருடனும் இணைந்து, அனைவருக்குமான வளர்ச்சி என்ற கொள்கை அடிப்படையில்தான் இந்தியா முன்னேறுகிறது. இந்தியாவின் ஜனநாயக விதிமுறைகளில் ஜாதி, மத ரீதியான பாகுபாடு இல்லை என்றார்.

**முகேஷ் அம்பானி, டிம் குக், சுந்தர் பிச்சைக்கு அழைப்பு:** மூன்று நாள் அரசுமுறைப் பயணமாக அமெரிக்கா சென்ற பிரதமர் மோடிக்கு வெள்ளை மாளிகையில் சிறப்பு விருந்து வழங்க ஏற்பாடு செய்யப்பட்டது. தொழிலதிபர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டது.

வெள்ளை மாளிகையில் வியாழக்கிழமை நடைபெற்ற விருந்தில் அமெரிக்க அதிபர் ஜோ பைடன், அவரது மனைவி ஜில் பைடன், பிரதமர் மோடியுடன் 380-க்கும் மேற்பட்ட முக்கிய சிறப்பு விருந்தினர்களும் கலந்து கொண்டனர்.

அதன்படி, ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் தலைவர் முகேஷ் அம்பானி, மஹிந்திரா குழுமத்தின் ஆனந்த் மஹிந்திரா, ஸெரேதா இணை நிறுவனர் நிகில் காமத், படத் தயாரிப்பாளர் நைட் ஷியாமலன், வடிவமைப்பாளர் ரால்ஃப் லாரன், கூகுள் சிஇஓ சுந்தர் பிச்சை, ஆப்பிள் நிறுவன சிஇஓ டிம் குக் உள்ளிட்ட பலர் இந்த விருந்தில் பங்கேற்றனர்.

EVA STALIN IAS ACADEMY